DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. STC. No. 5 / 2021
Deposition of PW1 / LW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு. இளம் அதிபன் |
| Father's / Husband Name | : | கருப்பசாமி |
| Village | : | ஆசாரிபட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | -- |
| Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2026.
1 ,2 எதிரிகள் ஆஜர் .

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து TNPSC Exam க்கு படித்து கொண்டு வருகிறேன். எங்களுக்கும், எதிரிகளுக்கும் பாதை பிரச்சனை இருந்து வந்தது. 20.09.2020 ம் தேதி மாலை 6.30 மணியளவில் எங்கள் ஊர் சாவடி முன்பு நானும், அசோக்குமார், பாலமுருகன் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம். அப்போது தங்கமுத்து என்பவர் என்னை கெட்ட வார்த்தையால் பேசினார். நான் இல்ல தாத்தா நான் பேசவில்லை என்று கூறினேன். அப்போது தங்கமுத்து என் கன்னத்தில் அடித்துவிட்டார். என் அப்பா அப்போது சம்பவயிடத்திற்கு வந்தார் அவரையும் ஆஜர் எதிரி அடித்து கீழே தள்ளிவிட்டார். என் அப்பா ஏற்கனவே இதய நோயாளி ஆவார். ஆஜர் எதிரி எங்களை பார்த்து நீகெல்லாம் ஒரு ஆளாடா என்று கூறினார். அப்போது ஆஜர் எதிரி அய்யனார் அருவாளை எடுத்து வந்து கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **புகார் அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தினை என் சித்தப்பா சின்னச்சாமி என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். அந்த இடம் பாதை

என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நானும் என் அப்பாவும் மற்றும் 2 நபர்கள் சேர்ந்து சின்னச்சாமி என்பவரை காளியம்மாள் வீட்டின் முன்பாக வைத்து அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. அப்போது அந்த வழியாக வந்த தங்கமுத்து மற்றும் அய்யனார் இருவரும் எதற்காக சின்னச்சாமியை அடிக்கிறீர்கள், அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு நான் தங்கமுத்துவை செருப்பால் அடித்தேன் என்றால் சரியல்ல அவர் தான் என்னை அடித்தார்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் என் அப்பா மது அருந்திருந்தார் என்றால் சரியல்ல. பாலமுருகன் தங்கமுத்துவை அடித்ததில் தங்கமுத்துவிற்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் 4 பேரும் எதிரிகள் தங்கமுத்து, சின்னச்சாமி, அய்யனார் ஆகியோரை அசிங்கமாக பேசி, கையால் அடித்தோம் என்று சொன்னால் சரியல்ல. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் என் அப்பா கருப்பசாமி தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்று கூறிவிட்டு தற்போது மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் அய்யனார் என்பவர் அருவாளைக் கொண்டு வெட்ட வந்தார் என்று கூறாமல் தற்போது மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்ததால் நாங்களும் அவர்கள் மீது நடக்காத சம்பவத்திற்காக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் ஆஜர் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, கையால் அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.20 13:12:44 +0530

Judicial Magistrate,
Andipatti.